உ

சிவமயம்.

தேரையர் அருளிச்செய்த

வைத்தியம் - 100.

சென்னை - இட்டா,

பார்த்தசாரதி நாயுடு சன்ஸ்,

சக்கரவர்த்தி பிரஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

இதன் விலை 1934 அணா-4

உ

சிவமயம்.

தேரையர் அருளிச்செய்த

வைத்தியம் - 100.

சிறப்புப்பாயிரம்.

ஸ்துதி.

கலி விருத்தம்.

திருவிநாயகன் றென்கைலாசத்தில்
அருமையாயெனக் கன்றுரைத்தப்படி
வறுமையில்லாவைத்திய நூற்சொல்லக்
* குறுமுனிப்பாதங்கொண்டு துதிசெய்வாம். 1

குறுமுனி-அகஸ்தியன்.

நூற்பயன்.

செய்யும்வாதமுஞ் சேஷ்மமும்பித்தமும்
நையுமார்க்கம் நலமுடநின்னமும்
கையுநெல்லிக் கனிபோல்மருந்தெலாம்
ஐயன்தேரைய னன்பான நூறிதே. 2

நூற்றுக்குள்ளே நொடிப்பேன்வியாதியை
ஆர்சொல்வார்களிங் கங்கத்திலுள்ளதை
மீறுகின்றசுரங்கள் தனைமிகக்
கூறுசெய்யுங் குருமொழிபார்த்திடே. 3

வாதபித்தசேஷ்மசுரங்களின் தொகுப்பு.

பார்த்துவாதசுரம்பத்து பன்னிரண்
டேற்று * வன்னிசுரமோரிருபதுஞ்
சேற்றுமத்தின் சுரமிருபத்திரண்
டாற்றவேண்டியறிவு தனைச்சொல்வேன். 4

* வன்னி-நெருப்பு-அதேபித்தம்.

அறுபத்திநாற்சுரத்திற்கும் பூபதிகுளிகை.

சொல்லுஞ் * சூதங் * கந்திவாளந்தன் னுடன்
வெல்லுந் * திரிகடுகுத் திரிபாலையுங்

கொல்லுங்காக்கணத்தின் விரையோர்வகை
நல்லக் * கள்ளுடன் நற் * கையானபாதியே. 5

* சூதம்-ரசம் * கந்தி-நெல்லிக்கந்தகம்.

* திரிகடுகு-சுக்கு-மிளகு-திப்பிலி-திரிபாலை-கடுக்காய் - தான்றிக்காய்-நெல்லிக்காய்கள்-தேன் *கையான்-பொற் கையாந்தகரை.

பாதிரண்டுமே பாகுபதத்தினிற்
(சோதியாம்) அடுப்பேற்றி யெரித்ததின்
நீதியானக் கியாழமதுவிட்டுக்
கோதிலாதரைத்துக் குன்றியாக்கிடேன். 6

ஆக்குஇஞ்சிரச மறுபத்துநாள்
போக்குமூன்றுநாளிற் பொல்லாசன்னியும்
நீக்குமெய்ச்சுரம் நீங்கிடுமபூபதி
பேக்குமாகும்பெரியதோர்வீக்கம்போம். 7

போகும்வீக்கமும் பொல்லாகுன்மமும்
ஏகுமெய்விட்டு எல்லாச்சுரங்களுந்
தாகமாக தவிக்கும்வியாதிக்கு
* நாகமாகும் நற்பூபதியாமிதே. 8

* நாகம்-சர்ப்பம்.

பூபதிக்குபுருஷருக்கும் * பூவைக்குங்
கோபமானகொடுஞ் சுரங்கண்டிடில்
ஆபத்துக்குதவன் றெனக்கிட்டதால்
தீபம்நோக்கிநீ சிம்மெனமூட்டிடே. 9

* பூவைக்கு-ஸ்திரீக்கு

மூட்டிடப்பாநீ மூவிரண்டாறுபேர்
தூட்டுவாய்க்குளிகையரைப் பொன்றுநாள்
நீட்டியோதிநிலை யில்லாமாந்தர்தன்
நாட்டுநோய்க்கு நமனிதுவாகுமே. 10

சுகவிரோசனம்-வாயு 80 துக்குங்
* கிருமிவிழவும் மருந்து.

ஆக்குதிரிபாலை யாந்திரிகடுகுடன்
வாக்குமுத்தக்காசு வாயுவிளங்கமும்

தூக்குஒமஞ் * சோமனுப்புரோகணி
நாக்குவிடையம். நறுக்குமூலமொன்றே. 11

* கிருமி-பூச்சி * சோமனுப்பு-இந்துப்பு.

ஒன்றப்பாபலமொவ்வோர்வகைக்கிது
நன்றப்பா நிலவாகைசிவேதைவோ
அன்றப்பாபடியரையாமணக்கெண்ணெய்
நன்றப்பாலேகியம்போல் திரட்டிடே. 12

திரட்டிச் * சீனிசிறுகவாயிலிட்டு
உருட்டுலேகியம் ஓர்கழஞ்சுள்ளுக்கு
மருட்டுபத்துவிசைமலம்பேதியாம்
வருட்டுங்கஞ்சிவள மாகக்கொண்டிடே. 13

* சீனி-சருக்கரை.

கொண்டிடும்வேப்பீர்க்குக் கியாழத்தில்
அண்டிடும்பூச்சியப் பத்தெறித்திடும்
மண்டி டங்குடல்வாயு * அபானமால்
புண்டிடும்பேதி பூபதியாமிதே. 14

* அபானமால்-அபானவாயு.

மூக்கிலிரத்தத்திற்கு

நசிகநெய்.

ஆமிதுவலரிசிபலமரைத்
தாமிது ஆவிநெய்யிலோர்பாக்களை
வாமிதுகுழப்பியொருமூன்று நாட்
போமிதுபிழியமூக்கின்ரத்தமே. 15

கிரிப்பூச்சுக்கு-மருந்து.

ரத்தக்காசுக்கட்டிக் களிப்பாக்குடன்
முத்தபொற்கடுக்காய் வகையோர்பலம்
நித்தமூன்றுநாள் நீயரைத்துட்கொள
செத்துகிரிப்புமூச் செறிந்தோடுமே. 16

கல்லெரிப்புக்கு.

ஓடும்வெளவா லுறைந்தமரத்தடி
நாடுசக்கை நலமாயரைத்துபின்
ஆடு * முள்ளிக்காயாகவுருட்டி நீ
போடுமூன்றுநாட்போய் விடுங்கல்லுமே. 17

* முள்ளிக்காய்-கண்டங்கத்திரிக்காயளவு-
மாந்தஞ்சவலைக்கு.

கல்லவங்கம்கறிமஞ்சள் ஓமம்
வெல்லுந்திரிபலாதித்திரிகடுகுடன்
நல்லசீரகம்நற் * கண்டாமையோடு
ஒல்லுந்தாளிசபத்திரி * யுள்ளியே. 18

* கண்டு-கண்டுபாரங்கி-ஆமையோடு
* யுள்ளி-வெண்காயம்.

உள்ளியோர்வகைக்கே யரைக்கால்பலம்
மெள்ளவேவறுத்தே வெந்நீர்விட்டரை
கள்ளமின்றிக்கருங்குன்றியாக்கித்தாய்க்
குள்ளபாலிலுரைத்துக் கொடுத்திடே. 19

கொடுத்திடாயொருகுன்றி யோர்வேளைக்கு
விடுத்தநாளிருபோதொருமூன்றுநாட்
கடுத்தமாந்தங்கயங்குஞ்சவலையும்
மடுத்துமந்திரமசியென்றோதிடே. 20

இராமபாணக்குளிகை.

ஓதுகந்தியிரதலவங்கமுஞ்
சாதுநாவிச்சலியாமலோர்வகை
மீதுதொட்டிப்பாஷாணம் நெருஞ்சிசாற்
கோதுபுளியிலைச் சாற்றினிலாட்டிடே. 21

ஆட்டிடுஇருசாமமும் அப்பனே
நீட்டிமாத்திரை நிழலிலுலர்த்திபின்
சூட்டுக்கும்சில சுரங்களறுபடும்
மூட்டுமந்திரமுன் சொன்னதாகுமே. 22

குளிர்சுரக்குளிகை.

ஆகுந்துத்தஞ் * சதுர் * பாஷாணந்திரி
யேகும் * வாளமிருவகை * வேதியான்
ருகுமோரிலரைத்து பயற்றள
வீகுஞ்சீதசுரங்களும் நீங்குமே. 23

* துத்தம் 4 * பாஷாணம் 3 * வாளம் 2 * வேதி-
சாத்திரபேதி.

மேகம் 21-க்கும்-காரீயச்சிந்தூரம்.

நீங்குதாரங்காரீயஞ்சமனெடை
வாங்கு * குரிச்சாற் விட்டரைத்தேயதை
ஓங்குமோட்டில்வைத்தே யோடுமூடியே
தேங்குசீலைத்திற மாகசுற்றிடே. 24

* சூரி-நததைச்சூரி.

சுற்றிக் * குஞ்சரஞ்சூது செய்யாமலே
நற்றிவெந்ததைநன்ரு பெடுத்துப்பார்
அத்திமாமுதற்கன் பாய்துதிசெய்ய
எத்துமேகமிருபஃதொன்றுமே. 25

* குஞ்சரம்-கஜபுடம்.

ஒன்றுகாரீயச்செந்தூரம் ஓர்பணம்
நன்றதாகநறுநெய்யி லீய்ந்திடில்
பன்றுடனிற்சா பத்தியமாகவே
மன்றில்பாதியில்மா நோய்பறக்குமே. 26

தொடைவாதத்திற்கு.

பறக்குமல்லிகை பாங்குடனேயிலை
யுறக்கும்ஆமணக்கெண்ணெயுறவாக
சிறக்கவேவறுத்திவ் விதங்கட்டிடில்
எரிக்குமோதொடைவாதமு மேங்குமே. 27

இரத்தசீழ்மூலத்திற்கு.

ஏங்கு * பூவந்திச்சக்கையெண்ணுறுபலம்
ஆங்குஓமம்அழிஞ்சில் விரைசுக்கு
நீங்குகீழ்க்காயினெல்லி வேர்ப்புராணியும்
பாங்குநீசெவ்வல்லிக் கொடிபார்த்திடே. 28

* பூவந்தி-மணிப்புங்கு.

பார்த்திடரதிவிடையம் பற்பாடகம்
நேர்த்திடாபறங்கிபட்டைச் சாதிக்காய்
வார்த்திடாபடிரண்டு வெள்ளாட்டுப்பால்
சார்ந்திடா யெடுத்தப்பிரகாறியே. 29

ஆறித்தேநிழலாக வுலர்த்தியே
சேரித்தேயிடித் தேவடிசெய்துடன்
நேரித்தைப்பனவெட்டுநெய்த்தேனொடு
பாரித்தைக்கொட்டைப் பாக்களவுண்டிடே. 30

உண்டிடாயிருபோதரைமண்டலங்
கண்டுமூலக்கிராணி சீழ்மூலமும்
அண்டிடும்வயிறிரத்தக் கழிச்சலும்
மண்டிடும்ஆவிநெய் யமுதாக்கிடே. 31

தந்தக்கடுப்புக்கு.

பாக்குஞ்சுக்குத்தோல் தானதைசீவியே
பாக்குடனுக்குள்வைத்து * சுவைத்திடில்
வீக்கும் நீங்குவெருந் தந்தமாகும்நீர்
வாய்க்குட்கொப்பளிக்கக் கடுப்பஞ்சுமே. 32

* சுவைத்தல்-மெல்லல்.

அஞ்சுவாதமடக்கித் தழுதாழைக்
* குஞ்சம்நொச்சி கொடுத்திடுய்வேதுதான்
மிஞ்சு நீரில்மிள கருணையின்வேர்
கொஞ்சமா யரைத்தேகுழயபேற்றிடே. 33

* குஞ்சம்-குன்றி.

எற்றும்போதுஇறங்கும்பல்வாய்வெலாம்
பூற்றவீக்கமும்பூதமுகங்களும
காற்றுப்போலடித்தேகறைக்குமிது
மாற்றுஞ்சஞ்சீவிமானிடர்தங்கட்கே. 34

தாம்பூரபற்பம்.

தங்கட்கேயொருதாம்பூர நீற்றயான்
திங்களன்றுதிறித்தாற்றளியே
அங்கமாயரைத்தன்மீதிறப்பியே
கங்கையைத்தரித்தோன்பாதமெண்ணியே. 35

எண்ணியோர் * கஜமேபுடம்பற்பமாஞ்
சண்ணுஓர்பண நந்தான்கொடுமேகம்போம்
மண்ணில்ஆவினெய்பாலரைமண்டலம்
எண்ணெணவீரியமிதுவாகுமே. 36

* ~~கஜபுடம் 2 முழம்.~~

சாதிலிங்கக்கட்டு.

அறுசீராசிரியவிருத்தம்.

ஆகுமேவாதமென்று அலேகுவார்மடையரப்பா,
சாகுவாரதன்மேல்வீழ்ந்து சலித்து ஐம்புலனும்வாடி,

நாகமேயணிந்தோன்பாதம் நண்ணி யெந்நேரமந்த, யோகத்தைக்கைவிடாமல் உளங்கிநோர்வாதஞ் செய் வார் 37

செய்குவோர் லிங்கங்கட்டச் சேதியொன்றுரைக் கக்கேளீர், உய்குபூவரசம்பட்டை யொன்னலர்வணங் கும் னேம்ப, நையவேயுலர்த்திநன்ருய் நற்குழிப்புட மே செய்து, பையவேதயிலம்வாங்கிப் பாங்குடன் சுரு க்குதாக்கே. 38

தாக்குவாயிரண்டுநாள் தான் தங்கமும் பொன்னு மாகும், நோக்குவாய் ஆயிபாதம் நொடிக்கு மூன்வாத மாகும், நீக்கிய நினைவைமாந்தர் நீங்கிடாசுரத்திற்கிய்ந் தால், பாக்கியவானேயாவான் பறந்திடுஞ்சன்னியெல் லாம். 39

எல்லையில் நரகமொன்று இரதமவ்வெடையாய் தூக்கி, நல்லதோர்கலசத்திட்டு நலமுள்ளபூரம்* மிடா வில், சில்லதாபொடித்துப்போட்டு சீலமண்மூன்று செய்து கொல்லுலையேற்றிசாமங் கொடுந்தணலெரித்தி டாயே 40

* மிடா-பானை.

எரித்திரண்டுசாமம் என்னசொல்வேன்சிந்தூரம், உருத்திராபரணன்தன்னை ஒருபணந்தேனிற்கொள்ள, வறுத்ததோரடைப்புமூன்றும் வாங்கிடுங்கணங்களெல் லாம், பறித்திடுமிதற்குபத்தியம் பாரினிற்கடினந்தா னே. 41

பீநசத்தலைவலிக்கு சௌரித்தைலம்.

பார்தனிற்சௌரிச்சாருேர் படியினிலாவின்பாலும் நேரதாயடுப்பிலேற்றி நெடியமால்தனைதுதித்து, சீரு டன்கியாழஞ்செய்து சிணத்தினில்மிளகோர் *சேரை, ஆறுமூன் அரைத்துப்போட்டு அதன்பின்நல் லெண் ணெய்வாரே. 42

வார்த்துமேதைலந்தன்னை வடித்தபின் மூழ்கிவந் தால் * நாற்றிசையறியச்சொல்வேன் நாமிதுசெய்து பார்த்தோம், போத்திடும் வியாதியெல்லாம் பெரியபீந

சங்கள் போகும்; மாற்றுமேயதிகமாகும் மண்டைநோ
யதுவுந்தீரும். 43

* நாற்றிசை-நால்திசை.

பித்தத்திற்குமுழ்க கீழ்க்காய்நெல்லித்தைலம்.

தீருமேபித்தம்போக திரும்பவுங் கீழ்க்காய்நெல்லி
வேருமேபிடிங்கிவந்து வெண்சலம்படியாறிட்டு, பாரு
நீ படியோரிரண்டிற்பதமுட * நாழிபாலும், சீருடன்
மிளகோர்சேரை சிறக்க எள்ளெண்ணெய்வாரே. 44

* நாழி-ஒருபடி.

எண்ணெயைமூழ்கிவந்தால் இயல்வுடன் தீரும்
நோய்கேள், நண்ணியபித்தத்தாலே நரைத்திடுந்தலை
கறுக்கும், பண்ணிய * வன்னியோர்நாற்பதுவும்போம்
பல்நீரும்போம், திண்ணமாஞ்சித்தர் மெய்ச்சுஞ் செக
மகிழ் தைலந்தானே. 45

* வன்னியோர்நாற்பது-பித்தம்-40

க்ஷணத்திற்கு தாளகபற்பம்.

வேறு.

செகத்துட்செப்புச்சிமிழ்தனில் சிறக்க * நிம்ப
இலையரைத், தகத்துள்தாளகம்பல மதனுள்வைத்துச்
சீலமண், வகுத்துச்செய்வாய் மூன்றுதான்வளமாய்த்
தும்பியோர்விடம், பகுத்துப்பாரும்பற்பமாம் பரமன்
ருட்பணிந்திடே. 46

* நிம்பம்-வேம்பு.

* தும்பியோர்புடம் கஜபுடம்-ஒன்று

பணிந்துதேனிலோர் பணம் பாரிலுள்ளமாந்தர்
கள் அணிந்தகாகமெட்டையும் அறுத்திடும் க்ஷயத்
தையுந், துணிந்ததோர்கபமெலாஞ் சோதிகண்டஇரு
ளென, பணிந்துவோடுமிருமல்தான் பறுத்த ஈளை
யோடுமே. 47

* சோதி-சூரியன்.

பயித்தியம் பிடித்தவர்க்கு மூழுக்காட்டமருந்து.

ஒடு * பேயன்தனைக்கொணர்ந்து பாயமாக தலை
சிரைகாடு நெற்றித்தனிலிருத்து தணிந்த உச்சிமட்டு

மே, வாடு கொண்டுகீறி நல்லவடிவ நானபலகரை, காடு சுண்ணந்தேய்த்தரைசேர் * சம்பழச்சாறிட்டிடே. 48

* பேயன்-பயித்திபம்பிடித்தவன்.

* சம்பழம்-எலுமிச்சம்பழம்.

இட் * டரக்கிமூன்றுபேரிடை விடாமல்நற்சலம், சட்டமாகநூறு * தாழிதளர்ந்த மூச்சிடாமலே, எட்டியே நீமூன்று நாளிவ்விதந்தொடுத்திடில், பட்டுப்போம் வியாதியும் பறக்கும்பேயும் பித்தமே. 49

* அரக்கி-தேய்த்து*தாழிமிடா- நூறுகுடஞ்சலம்.

* பேய்வெறி.

பித்தத்திற்கு சிதம்பரசக்கரம்.

பித்தமேபறந்திடப் பேயனுக் * கைம்பத்தொன், றத்தனைத்துதிசெய்து அவன்கையிலிருக்கிட, * சத்தமாதர்கூடிலுஞ் * சவங்கள்வந்து நேரினும், அற்றுப்போம் வியாதியும் அரன்றனாணையுண்மையே. 50

* ஐமபத்தோரட்சர-சிதம்பரசக்கரம்.

* இருக்கிட-கட்டிட.

* சத்தமாதா-சத்தகன்னிகள், சவம்-பேய்.

உண்மையான ஐம்பத்தொன்றுறுதியான சக்கரம், திண்மையான பேயுமில்லை தீநரகில்தீதில்லை, நண்மையான மனேகநோயுநாடும்போதுகாட்டிடில், வண்மையான பலசரைக்குவாய்த்த சுண்ணங்காட்டுவோம். 51

பலகரைபற்பம்.

காட்டுவோங் * கலசத்துள் கலங்குங்காடியரைபடி நாட்டுள்ளேபலகறை நன்னூற்பலமதிலிடு, வாட்டு வய்க்குசீலைசெய்து வண்மையாக போட்டதை, மூட்டு பாண்டமேல்குவித்து மூன்னும்பின்னுந்தியிடே. 52

* கலசத்துள்-சிறுபாண்டத்தாள்.

தீயெரித்துபின்பெடுத்து சீலையை திறந்துபார், மாயுமப்பலகறை மன்றில் நீறுபோலதாம், தாய்பதந்துதித்தெடுத்துதவிக்கும் புண்ணுக்கீய்ந்திடில், நோய்மிகுந்தமே கப்புண்நொடிக்கு மூன்பறக்குமே. 53

சுயாக்கினிதைலம்.

* பறக்குஞ்சூதமோர்மலம்பணிந்த * கெந்தியவ் லெடை, நறுக்குந் * தாமோர்பலம் நன்மையான * சிலையுடன், சிறக்கக்காடி விட்டரைத்தே யுருட்டிற்சீலை யில், வெறுக்கும் வேப்பெண்ணெய் துவைத்தெரியதீப மேததிடே 54

* சூதம்-இரசம் * கெந்தி நெல்லிக்கந்தகம்.

* தாரம்-அரிதாரம் * சிலை-மனோசிலை.

வேறு.

ஏற்றியதீபத்திலிறங்குமெண்ணெயை
நாற்றிசையோர்கொள்ளும் * நாகவல்லியில்
மாற்றிடும்வியாதியை மருந்தின்வேகந்தான்
சாற்றிடும் பத்தியம்சமமதாகுமே. 55

* நாகவல்லி-வெற்றிலை.

ஆகுந்தோள்வாத * மங்கைவாதமும்
ஏகுமேகால்முழங்காலின்வாதமும்
போகு * மெய்நடுக்கலும்புவியின்மீதொரு
பாகுமேவாதமும்பறந்துபோகுமே. 56

* அங்கைவாதம்-உள்ளங்கைவாதம்.

* மெய்-சரீரம்

பாம்புகடிதீரமருந்து.

பறந்துபோம் * பானுவை * பணியுந்தீண்டுநாள்
சிறந்தோர்சின்னியை தேடிக்காப்பிட்டு
இறந்திடுமனிதரை எழுப்பவேண்டிநீ
அறைந்திடும்பூசைகளதிகமாகவே 57

* பானு-சூரியன்-பணி-சர்ப்பம்-அல்லது - சூரிய கிரகணம்.

ஆகவே * வாரணமறுத்தபின்விடஞ்
சாகவேநசி-மசி-சலித்திடாமல்நீ

போகவேயுருலகூஷம்புரிந்தபின்பணி
ஏகவேபார்த்திதை இறக்கநன்றரோ 58

* வாரணம்-கோழி

நன்றுடன்குளிசஞ்செய * நாகவாதியே
இன்றுடன்மடிந்தவரெங்கிருக்கினுங்
கன்றுடன்சுடலையாங்காடுபுக்கினுஞ்
றென்றுடல்விஷமெல்லாஞ்செய்கைகாட்டவே. 59

* நாகவாதி பாம்புபிடரான்.

காட்டுவாய் முகத்தினிற்கால்வரைக்குமே
நீட்டுவாய்க்குளிசத்தை நீமூன்றுவிசை
சூட்டுவாய்மந்திரஞ்சொல்லியப்படி
ஓட்டுவான்விஷத்தையுமுகந்தெழும்புவானே. 60

சூலைவாயுக்குஎண்ணெய்.

வானத்தாவியவல்லிய * செம்பகந்
தானத்தைப்பிடித்ததை தரித்துஉட்குடல்
ஆனத்தைப்போக்கி நீயதனையோகுறல்
மோனத்திலிடித்து தூளாகமோதுவாய். 61

* செமபகம்-செம்போத்து-அதேகள்ளிக்காக்காய்.

மோதுவாய்முத்தெண்ணெய் மொண்டுவோர்படி
மீதுவார்செருப்படை மிகுந்த * கழற்கொடி
காதுவாய்மாதளை தாமரைப்படி
ஓதுவா * யுள்ளிச்சாறூர் நிரையரோ. 62

* கழற்கொடி கழற்சிக்கொடி.

உள்ளி வெண்காயம்.

நிரையதிமதுரமும்நிச * விளக்கமு
மரைவில்வால்மிளகொடுமாயுஞ்சந்தனங்
கரையுறுநெருஞ்சில்மூள்கசககரவோடு
துரையொருபலமதாய்த்தூக்கிபோடுவாய். 63

* விளங்கம்-வாய்விளங்கம்.

போடுசெவ்விள நீர்பொத்துவிட்டதில்
நாடுவாயெரியிடுநன்றதாகவே
சூடுடனெண்ணெயிற்சுருக்குத்தங்கினல்
பாடுவோமெண்ணெயைப்பதமதாகவே 64

பதமதாயெண்ணெயைப்பாலனேவடித்
திதமதாயேழுநாள் தினமுங்கொண்டிடில்
வதனமுஞ்சோதியாம்வாயில் நாறல்போங்
கதியும்பத்தியங் * கால் நிறுத்திடே. 65

* கால்-வாயு-வாயுபதார்த்தங்களை நீக்கவென்பது கருத்து,

வேறு

நிறுத்தும்போதினில் நீயடியக்காலத்தின்மேகம்
கறுத்தகுஷ்டமுங்காங்கை நீர்சுருக்குடனெரிவும்
பெறுத்தசூலையும் பேசிடாவாய்ப்பெரும்பாடும்
அறுத்திடுமிது ஆறு நாள்முறைமுறையறிவீர். 66

அறிவீரின்னமும் அப்பனேபழையநோயதற்கு
தெரியும்பத்தியந்தேன் புளிகுகையுப்பு அதனை
நெறியுடநிறுத்தியோரேழுநாளானல்
சரியதாகவேதான் புசிப்பாய்பலநோய்போம். 67

நேத்திரவாய்வுக்கு

போகும்நேத்திரவாய்வதுபொருந்திடில்புலன்கேள்
* நாகவல்லியின்சாற்றினிற்சுக்குரைத்ததனை
யாகமாயெடுத்தோர்பணந்தெறித்திடப்பதுங்கி
ஏகும்வாய்வுகளென்றும்வாராது நீரேற்றம். 68

* நாகவல்லி-வெற்றிலை,

வெட்டுக்காயத்திற்கு-

ஏற்றமாகுஞ் * சோறிருக்குங்கற்றாழையையெடுத்து
சாத்தமானதைதரித்திடுங்காயத்தில்சரியாய்
மாற்றமூன்று நாள்மருகியேகட்டுவீராகில்
ஆற்றுங்காயத்தை அங்கணனுணேமெய்யறிவீர். 69

* சோறிருக்குங்கற்றாழை சோற்றுக்கற்றாழை.

கொப்ப அபாயத்துக்கு எண்ணெய்.

அறிவீர்மங்கையரவர்கள் தங்கருப்பத்தாலலறி
திறிகி நிற்குமால்சீக்கிரம்வாங்குமுத்தெண்ணெய்
உருகியோமெனுமுத்தமடங்கடமெனவும்
பருகபூசவேபாலன்பிறப்பான்பார் தனிலே. 70

சுகவிரோசனம்-வண்ணக்கலை.

அறையவிரோசனமாகும்படிக்கெனக்கண்ணல்
குறுமுனியன்றுரைத்த படிபிரியமுடனே

வெள்ளைக்குங்கிலியம்பலம்.

பேராய்க்கள்ளியில்வைத்து-சீராய்புதைத்தெடுத்து
பேயனேயடுத்து(மண்டலஞ்சென்று)மேநயாயெடுத்து
(அருளிப்பூவில்)
பற்றும்புகைபிடிக்க இத்தேசமன்னர்கள்
பாங்காயோர்தாமோர்- நீங்காமல்போதியாம்
பாருமிதுசோதனையை நீருமே. 71

பெரும்பாட்டுக்கு. [வேன்முறை

பெண்ணேயுங்களுக்கெல்லாம்- நண்ணுய்ச்சொல்லு
பெரும்பாடுண்டாயிடில்-இரும்பான்*சங்கின்மூலம்
பேதையதைக்கொணர்ந்து-வாதையால்-தோல்சீவி
பெரியதுணியில்வைத்து-உரியக்கிளிபோல்கட்டி
பேசுய்வேப்பெண்ணெய்தனில் (வைத்தால்மேல்)
கூசும்பாரெண்ணெயதில்
கிளம்பக்கிளம்பஎடுத்-தளம்பாமல்வெந்தபின்பு
உளம்பார்த்துக்கொண்டிட அழகாந்தேகமுன்போல்
என்றுமுண்டோவியாதியுனக்கினிமேல் 72

* சங்கின்மூலம்-சம்கன்வேர்.

இரத்தபிரமியத்திற்கு.

அல்லவேமாந்தருக்கு-தொல்வினையானரத்தம்
ஆகும்பிரமியன்-வாசாகவடிந்திடில்
அன்பானதேங்காய்ப்பால்-அதனெடைபுங்கம்பால்
அசையா * ஓரிதழ்மூலப்-விசையாயெடுத்தரைத்து
அப்பனேகொடுத்து (மூன்றுநா)ளுக்கிப்பாலைத்தடுத்து
அவனேவெகு
ஆரபாரமாக்-காரசாரந்தள்ளி
நேராபத்தியஞ்செய்தால்
தீராதவெள்ளையும்போம்
அரனுணையிஃதுண்மையறிவீரே 73

* ஓரிதழ்மூலம்- ஓரிதழ்த்தாமரை.

பெண்ருதுவாக.

அன்பாயுங்களுக்கொரு-தென்புசொல்கிறேன்புத்தி
அரன்சொன்னுரெனக்கன்று- திறஞ்சொன்னே னுனக்

* அடவிகானந்தன்னை-திடமாயடுப்பிலேற்றி [கின்று
அதுவெந்தநீரைமூன்று-நீவேளையீய்ந்துபாரே
அதிசயங்களாகும்-இருள்களுமேயேகும்
வல்வினையெல்லாஞ்சாகும் (பிடித்தபேய்கள்)
நாகமெழுதிகட்டு
* அன்னையென்பாரனைவோருமுன்னையே 74

* அடவிகானம்-காட டுக்கொள்ளு * அன்னை-தாய்.

நேர்வாளச்சுந்தி.

ஐயாவயிந்தியரே-மெய்யாலாளச்சுத்தி
ஆர்க்குந்தெரியமனுவோர்க்கு-உரைக்கக்கே
அதனை * சாணிநனில்-விதனசுத்திசெய்து
அன்றேதோடெடுத்து-இன்றேபசுவின்பாலில்
அடுப்பினிலேற்றி (சூடுகொண்டால்)
எடுத்துநீயாற்றி (வெய்யலில்வைத்து)
ஆவினெய்யதனைவிட்டு-ஔழ்தம்வறுத்துக்கொள்ளு
அழகானமருத்றுக்கு-தளகர்த்தனுமிது
அதுவேநேர்வாளமறிகுவீரே. 75

* சாணிணம்-சாணியெனமருவியது.

ஆணுக்கு-பெண் இடுமருந்து.

பாரும்வேசியரெல்லாம்-பண்பாய்பிழைக்கவேண்டி
பாங்காயிடுமருந்து பார்தனில்மாந்தருக்கு
பச்சையோணன்பிடித்து-பிச்சிமிகவேயெடுத்து
பரமாய்ஆடையொட்டிந்-திறமாய்ச்*சிணுங்கிவேரும்
பால*நங்கைவேரும*ஈசுரமூலி
கோல*கொங்குவேரும்*உன்*னுதத்தால்
பரிவாய்சாமம்ஆட்டி-பிரியமோகினிமூட்டி
பால்அன்னந்தனிலிடபோர்வந்துசுடு
காடேறினுமவளைகைவிடான். 76

* சிணுங்கி-தொட்டாற்சிணுங்கி * நங்கை-சிறியானங்கை.

*ஈசுரமூலி-தலைச்சுருளி * கொங்கைவேர்-கருஞ்சுரை.

* நாதம்-இரத்தம்.

ஆண்பிந்துதம்பனம்.

மன்னர்மாதர்களைச்சின்னபின்னஞ்செய்ய
* மகத்தானவேருண்டுஜகத்திலதனைக்கண்டு [பின்)
மங்களமாகவேசிங்காரசோடசோப (சாரமதாயுச்சரித்த
மடக்கியேயெடுத்து - தகடுதனிலடக்கிஉட்கொடுத்தரை
யிற்கட்டி
அஞ்சாதபெண்களை செஞ்சுக்கெஞ்ச நீயும்
ஆணவத்தால்காம பாணமதனைபோடு
அடிபணிவாரெந்நேரம் அருமைமாதர். 77

* மகத்தானவேர்-பிரணவமுதன்மூளைக்கொடி

ஸ்திரீபிந்துதம்பனம்-ஆண்பிரிய.

தங்கமானகிளியே இங்கிதமாண்பர்கள்
தயவாயுந்தனைக்கொண்டு சுயமாய்ப்பொருள்கொடுத்தா
தவசியதாகவே * அவசியமா * யிருள் [ல்
தாங்கிய நாளதனில் ஓங்கிசுடுகாடேறி
தாரணஞ்செய்தவ்வேருக்கு * வாணங்கொய்து

உச்சாட்டினம்

தானேயுபதேசித்து மானேயதனைக்கட்டு
ஏனேஇதுவென்றெண்ணிநானே போகிறேன்பிராண
நாயகியேயன்று முதல்நாடிடான். 78

* அவசியம்-அகத்தியம் * இருள்தங்கிய நாள்-அமா
* வாரணங்கொய்து-கோழிபலியிட்டு. [வாசை

சுரத்திற்கு பாஷணக்கட்டு.

அறுசீராசிரிய விருத்தம்.

அன்னமேபாஷாணத்தையடவுடன்கட்டவேண்டி
இன்னமும்பலம்ஒன்ருக எடுத்துஓர்ஓர்பாண்டத்திட்டு
* வன்னியச்சாரிரண்டு வாகுடனேதனைவிட்டு
மன்னுநாள் நாற்பதாலுல் மைந்தனேயெடுத்திடாயே.

* வன்னியச்சாறிரண்டு-வன்னிச்சாரிரண்டுபடி.

எடுத்ததையடுப்பிலேற்றி எரித்திடுஇரண்டுசாமம்
வடுப்படாகட்டிதன்னை வாங்கிநீகழுவிப்பின்பு
கடுத்தகற்ருழைவேரில் கட்டிமைதனித்துமூடி
தொடுத்திடுங்கஜபுடந்தான் துயராறுங்கட்டியாமே. 80

கட்டியைசுரத்திற்கிய்ந்தால் கலங்கும் வல்வினைக ளெல்லாம், மட்டிலா *வகாரமாகும் *வன்னிக்குமிது வேயாகும், பட்டுப்போம் வியாதியெல்லாம் பல பல மு றைகளேனே, திட்டமாயிதனைக்கேட்பார் தேரையனெ ன்றபோதே. 81

* வகாரம்-இரசிதவித்தை * வன்னி-நெருப்பு.

போதனையடக்கவேண்டு புண்ணியவிசாகனேறும்,

* ஆதனையதனைத்தாக்கு அப்போதே *யிறுகிப்போவா ன், நீதியாய்சில லோகத்தில் நீயது கொடுத்தாயாகில், சோதியேழரையுமாகுந்துயரறு மாற்றுமாமே. 82

* ஆதளை-காட்டாமணக்கு.

* இருகிப்போவான்-கட்டிப்போகும்.

அஞ்சனம்.

ஆமையின்கண்ணெடுத்து அப்பனே *தூசிநேடு சேமமாயேரண்டெண்ணெய்ச்சேர்த்ததை கருக்கிக்கொ ண்டு, ஊமையின்கையிற்போடு உலகொலாந்தெரியுமங் சே, நாமுமேவருவோங் கண்டாய் நற்பொருளதுவுங் கிட்டும். 83

* தூசி-சீலை.

இரசக்கட்டு.

கிட்டுங்கல்தேரைதன்னைகெருவமில்லாமல்வாங்கி, ஒட்டுமே *பவனந்தைத்து ஒருகழஞ் *சிரதம்விட்டு, கெட்டிமேல்வாயுதத்தைத்துகெணித *மானேந்திமூலி வட்டமாய்கிண்ணஞ்செய்து வைத்திடுதேரைதன்னை.

* பவனம்-ஆசனவாய் * இரதம்-ரசம்.

* மானேந்திமூலி-ஈசுரமூலி

தன்னையேசீலைசெய்து *சதுரங்கபுடத்திற்போடு, வன்னியாலிரதங்கட்டும்வாதங்களநேகமாகும் சென்னி யிற்கட்டும்போதுஜெகதலமெல்லாந்தாண்டும், நன்னய அமிர்தஞ்சிந்தும் நரைதிரையற்றுப்போமே. 85

* சதுரங்கபுடம்-கஜபுடம், அல்லது - நாலெனக் கொள்க. * சென்னி-சிரசு.

இரசச்சிந்தூரம்.

அற்றவோர் தேங்காய்தன்னை அதிகமாயிரு துண்டாக்கி, பத்தியா * யறுகுமூலிபாங்குள்ள * சிரட்டைக் கப்பி, சித்தமாய் * வழலைசேர்த்து சீக்கிரம் ரசத்தை வார்த்து, எத்திசையறியச் சொன்னோம் ஏழுமண் சீலை செய்யே. 86

* அறுகுமூலி - வெள்ளறுகு * சிரட்டைக் கப்பி - கொட்டாங்கச்சிக்கு அப்பி * வழலை மூப்பு.

செய்திடுந்தேங்காய்தன்னை சிறப்புள்ளபுடத்திற்போடு, எய்து நீ ஆறவிட்டு எடுத்திடு என்னசொல்வேன், வையகந்தனிலேசுட்டிவைத்து நீசட்டியிட்டு * பொயய்திலேற்றும்போது புகழ்கின்ற * நாதம்வாரே. 87

* பொய்-அடுப்பு * நாதம்-சுத்தசலம்.

நாதம்வார்த்தெரிக்கும்போது நன்றதாயுருகியாடும் ஊதமேல்நெருப்பதன்னை ஒருபலம்பசுவின்வெண்ணெய், நீதமாங் * கௌரிபோடு *கிஞ்சுகபுனுகும்போடுசோதியாம்வழலைபோட * துவிதத்திற்கதிகந்தானே. 88

* கௌரி-கௌரிப்பாஷாணம்.

* கிஞ்சுகம்-சிவப்பு * துவிதம்-இரண்டு.

துவிதாமாஞ் சிந்தூரத்தை தோத்தரித்ததனைவைத்து, அவிதமாநவலோகங்களடவுடனுருகும்போது, பவிதமாயனுபோவிட்டால் பார்க்குமுன் * ஏமமாகும், உவியுடையோர்க்கு வாய்க்கும் நாம்சொல்லுமுறையிதாமே.

* ஏமம்-பொன்.

முறையிது தவங்கூத்தாடிமுன்னிதுதாவும்போது கரைதனில் வீழ்ந்தேகாலுங்கையொடிந்ததுவும் போகும், துரைசபைத்தேகும்போதுசுருக்குடகுணம்போல் நெற்றிப், பிறைதனில் திலதம்போட்டுப்பேசிடவழக்கு நன்றே. 90

நன்றிதுவாதமெல்லாம் நடுக்குஞ்சிந்தூரத்தாலே ஒன்று * நாற்பதுவாம்வன்னி ஓடிடுய்புவியைவிட்டு சென்றிடுந் தொண்ணூற்றுறுசேஷமமுமகலுமித்தை, மன்றுளோர் வருஷமுண்டால் மாதவர்க்கதிகமாமே ()

* நாற்பதுவாம்வன்னி-பித்தம்நாற்பது.

* மன்று- நீதத்தலம்-அதாவதுலகு

ஆமேயிக்கலியுகத்தில் ஐயிருவருஷந்தன்னில்
தாமேசேஷமவியாதிதரணியில்மாந்தர்க்காகும்
போம்இதால்வாந்திபேதிபொங்குவே அநேகமாக
காமிதுபோகச்சொல்வோம்நாரணன் கங்கைபாதம் 92

நாரணன் தங்கைதன்னை நமஸ்கரியிதுவும்போகும், * வாரணமுகவன்சொன்ன வங்கசித்தூரங்கொள்ளு, காரணமூவைந்தானால் கருங்குஷ்டமதுவுண்டாகும், பூரணகும்பம்பண்ணி * புவனையைபோற்றிச்செய்யே. 93

* வாரணமுகவன்-விநாயகன்.

* புவனை-சந்தி-அதேசுத்தசலம்.

செய்துதாம்பூரங்கொள்ளு சென்றிடும் வியாதியெல்லாம், எய்துமோரிருபதானால் ஏகமாம்வாதநோய்தான்,கொய்துமுப்பலியுமநன்றாய்க் கொடுத்திடும்பூசை நன்றாம், மைதிரிபுரையின்பாத மனதினிலிருத்திக் கொள்ளே. 94

கொள்ளுவாயோகந்தன்னைக் கோவெலி அலறியோடும், எள்ளளவாகவேதான் எடுத்தொருமூன்றுநாளும், உள்ளுக்குக்கொடுப்பாய்சுக்கில் ஓடுமேவாதமெல்லாம், கள்ளமேயில்லையிந்தகாரிய * மாயன்சொன்னார்.

* மாயன்-விஷ்ணு.

நரம்புசிலந்திக்கு-மருந்து.

மாயன்சொல்லின்னங்கேளு மானிடர்தனக்குஇன்னம், நேயனார்சிலந்திகண்டால் நேரிடும்வகையேதென்னின் தோயவிரோசனந்தான் தொடுக்குமோர்விசைமேலெல்லாம், காயம்போல் அரிப்பெடுக்குங்கைகண்ட மருந்துகேளீர். 95

கண்டதோர் அழுக்காரவேர்கருணைவேர் இஞ்சி வேரும் பண்டுமாபோல் அரைத்துபதத்தினில் அவித் தெடுத்து * புண்டுமேல்கட்டத்தீருப்போகும் புண் மூன்றுநாளில் தெண்டன்நீ எனக்குப்போடு தேரை யன் முறைதப்பாதே. 96

* புண்டு-நரம்புசிலந்தியின் புண்

பெருவயிறுவீக்கத்திற்கு.

தப்புஞ்சாரணைக்கொழுந்து சரியிடை உப்புங் கூட்டி, துப்புரஆவின்பாலில் துரிதமாய்க்கொண்டா யானால், அப்போதேவாங்கும்பேதி அடிவயிறுகழியு மின்னம், உப்பில்லாக்கஞ்சிகொள்ளு ஒடுங்குபேர்வயி றுந்தேயும். 97

வசிய-மை.

தேய்ந்து போகாமல்மாந்தர் செழிப்புடனிருக்க வேண்டி, ஆய்ந்தபுல்லுருவிவாங்கி அதனைதேன் அதிற்குழப்பி, காய்ந்திடும்பானுவுக்குங்ரடிகிய * சுக் கிரற்கும், சாய்ந்திடாதிலதம் போடக்ஷணத்தினில்வசி யமாவார். 98

* பானு சூரியன் அதே-ஆதிவாரம்.
* சுக்கிரன்-வெள்ளி.

ஆமே அம்பலிவியாழம் அப்பனேநெய்யிற் போட்டு, தாமேசெவ்வாய் * புதற்குதாழ்வில்லாபாலிற் போட்டு, நா * மந்தன்தயிரிற்போடு நன்றதாய்வசிய மோதில், சோமன்பபால் ஒளியுமாகும்துரைகள் தான் வசமாவாரே. 99

* அம்புலி சந்திரன் அதேதிங்கட்கிழமை.
* புதற்குபுதனுக்கு-மந்தன்-சனிக்கிழமை.

வசமதாய் இத்நநூறும் வாகுடன்பார்த்தபேர்கள், நிகமுள்ளவயித்தியராவார்நெடும்புவியுள்ளோரெல்லா ம்; * திசைமுகன் அருளால்சொன்னதேரையன் மரு ந்து கொண்டோர், புசபலமிகவுண்டாகி புவிதனில் வாழ்வர்தாமே. 100

* திசைமுகன்-பிரமன்.

தேரையர் அருளிச்செய்த வைத்தியம்-100.

முற்றும்.

புத்தகவிளம்பரம்.

	ரூ.	அ.
குமரேச சதகம் உரை	0	12
அறப்பளீசுரசதகம் உரை	0	12
கம்பராமாயண பாலகாண்டம் பாட்டு உரை	3	0
பட்டினத்தார்பாடல் உரை	1	8
தாயுமான சுவாமி பாட்டு உரை	3	4
விநயக புராண வசனம் கிளேஸ் காலிகோ பைண்டு	4	0
தனிப்பாடற்றிரட்டு பாட்டு உரை	2	0
வேதாரணிய ஸ்தலப்புராண வசனம்	0	8
மகமாயி அம்மன் பூசாரிப் பாடல்	0	4
மலே-மாந்திரீக ஹரிச்சுவடி	0	4
பாண்டியதாஸ் கீர்த்தனே	0	5
ஆர்மோனிய ஆசான்	0	2
கதைபுத்தகங்கள்		
அற்புத பூலோகரம்பை கதை படத்துடன்	1	0
32 பதுமை கதை	0	8
ஸ்திரீ புருஷ ரகசியம்	1	0
ஆயிரத்தொருநாளில் சொல்லிய பாரிசுக்கதைகள்	2	0
நாகபூஷணம் தமிழ் நாவல்	0	12
வைத்திய புத்தகங்கள்		
புலஸ்திய மகாரிஷி வாத சூத்திரம்-300	0	12
உரோமரிஷி சூத்திரம் 100	0	4
அகஸ்திய முனிவர் பூரண சூத்திரம் 216-பாடல்	0	8
ீதரையர் வைத்தியம் 100 பாடல்	0	4
।ாலவாகடத்திரட்டு வைத்தியம் 1200	1	0
ஊர்வசி வயித்தியசிட்கா	0	12
இரண்டாம் பாகம்	0	12
தன்வந்திரி சருக்கிடை நிகண்டு – 300	0	12

	ரூ.	அ
ஆயுள்வேத சுருக்கம்	0	12
திருமூலநாயனர் வைத்திய காவியம் 1000 பாடல்	1	0
வைத்திய குரள் பழமொழி விளக்ம்-108	0	8
திருவள்ளுவ நாயனர் சூஸ்திரம்-16 ஷை யார் இயற்றிய பஞ்சரத்தினத் திருப்புகழ்-11 சேர்ந்தது	0	2
புலஸ்தியர் விளக்கிய ஞானகற்பம்	0	8
அகஸ்திய செந்தூர 300 க்கு சூத்திரம்-36 இதில் திருமந்திரம்-8 அடங்கியது	0	[illegible]
திருவள்ளுவ நாயனர் பரிமுப்புசூத்திரம்-30	0	[illegible]
சோதிட புத்தகங்கள்		
நவக்கிரக சிந்தாமணி என்னும் சாதக சூடாமணி மூலமும்-உரையும்	0	1
மணிமந்திர வைத்திய சேகரம்	1	
களவுகாணும் சாஸ்திரம்	0	
வீமகவி பாட்டு உரை	1	
சுகர்நாடி சோதிடம்	1	
சோதிமாமுனிவர் சோதிட கேரளம்	0	1
சாதகலங்காரம் மூலமும் விரிவுரையுடன்	2	
சோதிடமுகூர்த்த விதானம்	0	1
கணித முருகசேகரம்	1	
ஹோராசாஸ்திரம்	1	
போகமுனிவர் ஞானசூத்திரம்–100 பாட்டு	0	
கௌசிகசிந்தாமணி 1-பாகம்	1	
மேற்படி 2-பாகம்	1	
மேற்படி 3-பாகம்	1	
சோதிட நூலாதாரம்	0	
சர்வ கனவின்பலன்	0	

இட்டா - பார்த்தசாரதி நாயுடு அண்டு சன்ஸ்,
189, தங்கசாலே தெரு, சௌகார்பேட் போஸ்டு, சென்னே.